# புதிய அரசியலமைப்பிற்கான
# முன்னுரை

CPA
Centre for Policy Alternatives
விகல்ப ப்ரதிபத்தி கேந்த்ரய
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# புதிய அரசியலமைப்பிற்கான முன்னுரை

மூலம் :

**சட்டத்தரணி எஸ்.ஜீ. புஞ்சிஹேவா**

தமிழில் :

**எஸ். சிவகுருநாதன்**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு

# புதிய அரசியலமைப்பிற்கான முன்னுரை

முதற்பதிப்பு : ISBN : 978-955-4746-40-4

பக்க வடிவமைப்பு : எஸ். கமலாதேவி

அச்சாக்கம் : க்ளோப் பிரின்டிங் வர்க்ஸ் 011-2329739

வெளியீடு : மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

| | |
|---|---|
| முகவரி | : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு-05 |
| தொலைபேசி | : 011 2370803/4 |
| ஃபக்ஸ் | : 011 2370801/2 |
| இணையதளம் | : www.cpalanka.org |
| மின்னஞ்சல் | : info@cpalanka.org |

# முன்னுரை

எதிர்காலத்தில் இலங்கையில் புதிய அரசியலமைப்பு உருவாகும் போது, பயன்படுத்தக்கூடிய ஒருசில கருத்துக்கள் இச் சிறு நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இக்கருத்துக்கள் குறிப்பாக தென்ஆபிரிக்காவினதும், கென்னியா நாட்டினதும் அரசியலமைப்புக்களை அடியொட்டி தொகுக்கப்பட்டுள்ளது.

இது பிரஜைகளின் பரிசீலனைக்கு மிகவும் உசிதமானது எனக் கருதுகிறோம்.

**– எஸ்.ஜி. புஞ்சிஹேவா**

01.10.2015

## அரசியலமைப்பென்றால் என்ன?

**இது ஒரு சட்டமாகும். இது நாட்டின் சாதாரண சட்டமல்ல. நாட்டின் மிக உன்னதச் சட்டமாகும். ஏனைய அனைத்துச் சட்டங்களும் இந்த அரசியலமைப்புச் சட்டத்தை அடியொட்டியே செயற்பட வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தை மேலோங்கி எந்தவொரு சட்டமும் செயற்பட முடியாது. நாட்டிலும், பிரதேசத்திலும், ஒரு நிறுவனத்திலும், வீட்டிலும் அரசியலமைப்பை மீற முடியாது. கிராமத்தின் மரண நன்கொடைச் சங்கம் தொடர்பான சட்டமோ அல்லது விளையாட்டுச் சங்கம் தொடர்பான சட்டமோ அரசியலமைப்புச் சட்டத்தை மீறி செயற்பட முடியாது.**

## அரசியலமைப்புச் சட்டத்தை யார் அனுசரித்து நடக்க வேண்டும்?

**அரசாங்கம், ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைவரும் அரசியலமைப்புச் சட்டத்தை அனுசரித்து நடக்க வேண்டும். அதாவது அரசியலமைப்புச் சட்டத்தைமீறி எந்தவொரு தனிநபரும் செயற்பட முடியாது.**

அரசாங்கம் அமைந்திருக்க வேண்டிய முறையும், அமைச்சர்களும், அதிகாரிகளும் செயற்பட வேண்டிய முறையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அவற்றிற்குரிய அதிகாரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, மேற்படி அதிகாரங்களை மீறி தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதைத் தடுக்கும் சட்டங்களும்

அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செயற்படுதலை தடுப்பதாயின் பிரஜைகளின் உரிமைகளும், மேற்படி உரிமைகளை அமுலாக்கி உரிய பரிகாரங்களைப் பெறக்கூடிய நிறுவனங்களும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட வேண்டும். மேற்படி நிறுவனங்கள் சுயாதீனமாக அமைய வேண்டும். அமைச்சர்களின் கீழ் அவை செயற்படவும் கூடாது. அதேசமயம் நிறுவனங்களின் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு தகுதிவாய்ந்த கல்வி அறிவும், அனுபவமும் இருத்தல் வேண்டும். தலைகுனியாமல் செயற்படக்கூடிய ஆற்றலும் அவர்களுக்கு இருத்தல் வேண்டும்.

அமைச்சுக்கள், திணைக்களங்கள்,அரச அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரித்தான நடவடிக்கைகளைப்பற்றி தனியான சட்டதிட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. மேற்படி அனைத்துச் சட்டங்களும் அரசியலமைப்பின் உறுப்புரைகள் செயற்படக்கூடிய வகையில் உருவாக்கப்பட வேண்டும். அதேசமயம் ஒவ்வொரு அமைச்சையும் சார்ந்த ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் உரித்தான விடயப் பரப்பிற்கு அமைய காலத்திற்குக்காலம் சாதாரண சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அவை பாராளுமன்றச் சட்டங்கள் என அறிமுகப்படுத்தப்படும். மேற்படி சட்டங்களும் அரசியலமைப்பிற்கு அமைவாகவே இருத்தல் வேண்டும். ஒரு பாராளுமன்றச் சட்டம் அதற்கே உரித்தான நடைமுறைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்படா விட்டால், அது நாட்டின் சட்டமாக அமைய மாட்டாது. இச் சட்டங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதாகவோ அல்லது குறிப்பிட்ட சட்டத்தை இல்லாதொழிப்பதாகவோ இருந்தால் சட்டத்தை உருவாக்கும் அதேமுறைமை பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், அரசியலமைப்பில் திருத்தங்களையோ, மாற்றங்களையோ அல்லது முழுமையாக நீக்குவதோ ஆயின் விசேஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறவேண்டும். ஏதிர்கால அரசாங்கங்களும் ஒரு நிரந்தரமான சட்டத்தை அனுசரிக்க வேண்டிய காரணத்தினாலேயே இதற்கு இவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதேசமயம், ஒரு அரசாங்கம் பதவி வகிக்கும்போது அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டாலும், உரிய முறையிலேயே அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும்.

## புதிய அரசியலமைப்பு ஏன் அவசியமாகிறது?

1947 ஆம் ஆண்டில் பாராளுமன்ற முறைமையோடு எமக்குப் புதிய அரசிலமைப்பும் கிடைத்தது.

**1972 இல் பிரித்தானிய பிணைப்பில் இருந்து விடுவிக்கப்படும் எமக்கே உரித்தான குடியரசு அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.**

**1978இன் ஜனாதிபதி முறைமை உள்ளடக்கப்பட்ட அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது. எனவே மற்றுமொரு புதிய அரசியலமைப்பு அவசியம்தானா? ஆம் இவை அனைத்தும் எம்மீது திணிக்கப்பட்டனவே ஒழிய நாம் உருவாக்கிக்கொள்ளவில்லை. உயர்மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு கீழ் மட்டத்திற்கு அதாவது பொதுமக்கள்மீது சுமத்தப்பட்டவையாகவே அவை இருந்தன. தற்போது கீழ் மட்டத்தில் இருந்து மேல் மட்டத்தை நோக்கி செல்வாக்குச் செலுத்தக்கூடிய அரசியலமைப்பே புதிய அரசியலமைப்பாக எமக்குத் தேவைப்படுகிறது. ஏனெனில், புதிய நாடு, புதிய மனிதன் உருவாக்கப்படுவது பொதுமக்களின் அபிலாஷையாகும்.**

புதிய அரசியலமைப்பைப் பற்றி யோசிக்கும்போது கடந்தகால அரசியலமைப்புகள்மூலம் ஏற்பட்ட சமூக, அரசியல் குழப்பங்களை நீக்கி அவற்றைப்பற்றி சற்று ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு நோக்குவோம். 1947 அரசியலமைப்பு முழுமையாக பிரித்தானியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரசியலமைப்பாகும். சில சிறந்த பண்புகள் இருந்தாலும், காலனித்துவ மட்டுப்பாடுகள் அந்த அரசியலமைப்பில் இருந்தன. பொருளாதார, கல்வி, மொழி ரீதியாக இப்பண்புகள் அடையாளம் காணப்பட்டன. பௌதீக ரீதியாக, துறைமுகங்கள், விமான நிலையங்கள், வெளிச்ச வீடுகள் என்பன அக்காலகட்டத்தில் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. ஏற்கனவே அமுலில் இருந்த அரசியலமைப்பின் கீழேயே, 1956இல் பாராளுமன்றத்தால் பௌதீக ரீதியான ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

1972 குடியரசு அரசியலமைப்பின் மூலம் வெளிநாட்டிற்கு சாதகமான இயல்பு மாற்றப்பட்டு தேசிய வடிவம் கொண்ட ஒருநிலைமை உருவாக்கப்பட்டதாக ஒரு நம்பிக்கை நிலவியது. ஆனால், அதன் ஊடாக ஓர் இனவாத போக்கு வளரத்தொடங்கியது. இந்த அரசியலமைப்பு பற்றி பரந்துபட்ட மக்கள் கலந்துரையாடல் ஆரம்பமானது. அதேசமயம் “சிங்கள பௌத்த” குறுகிய கருத்தியலும் ஏற்பட்டது. சில வெளிநாட்டு கடப்பாடுகளை இல்லாதொழிக்கும் வகையில் மேலோட்டமாகத் தோன்றினாலும் உள்நாட்டு பிரிவினைகள் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அதுவரை நிலவிய ஜனநாயகப் பண்பான “எந்தவொரு இனத்திற்கோ, மதத்திற்கோ கூடிய கவனிப்போ அல்லது குறைந்த கவனிப்போ காட்டப்படுவது அரசியலமைப்பிற்கு எதிரானது எனக் குறித்துரைக்கப்பட்டு இருந்த 29வது உறுப்புரை நீக்கப்பட்டது.” அதற்குப் பதிலாக நாட்டின் சகல பகுதிகளுக்கும் முரணான சட்டமே அதற்குச் சமமாக உருவாக்கப்பட்டது. அதாவது 1972 அரசியலமைப்பின் 6வது மற்றும் 7வது உறுப்புரைகளாகும். “சிங்களமொழி அரசகரும மொழி என்று குறித்துரைக்கப்பட்ட சாதாரண சட்டமும், பௌத்தமதம் அரச மதம் என்பதும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டது.” இரண்டு பிரதான மொழிகளும், முக்கிய நான்கு மதங்களும் அமுலில் உள்ள ஒரு நாட்டில், ஒரு மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்தும், ஒரு மதத்திற்கு அரசமத அந்தஸ்தும் வழங்கப்பட்டமை கடந்தகாலத்தில் இலங்கையில் மோதல்களுக்கும், கிளர்ச்சிகளுக்கும், ஆயுத பாவனைக்கும் மூலகாரணமாக அமைந்தன.

ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்ட பின்னர், சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாக்கப்பட்டாலும், அது ஏட்டுச் சுரைக்காயாக இருக்கின்றதேயொழிய, முழுமையான நடைமுறைக்கு வரவில்லை. இந்த நிலைமை தொடர்கிறது.

**1978 அரசியலமைப்பின் பின்னர் சட்டத்தின் ஆட்சி செயழிலந்தது. பாராளுமன்றம் கள்வர்களின் குகையாக மாறியது. மனிதத்துவத்தை கைவிட்டு, பணத்தின் பின்னால் ஓடும் ஒரு சமூகம் உருவாக்கப்பட்டது. அரசியலமைப்பிற்கான 18ஆவது திருத்தம் 2010 இல்**

**அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் துஷ்டத்தனங்களும், அதர்மமும் அரச நிர்வாகத்தில் உச்ச கட்டத்தை அடைந்தது. 2015 ஜனவரி 08ஆந் திகதியும், ஆகஸ்ட் 17ஆந் திகதியும் தார்மீகத் தனமற்ற ஆட்சி வீழ்த்தப்பட்டு புதிய அரசாங்கம் உருவாகியது.**

மேற்படி அனைத்து அரசியலமைப்புக்களும், ஒரு நபரின் அல்லது ஒருசிலரின் மனதில் ஏற்பட்ட கருத்துக்கள் கல்விமான்களினால் வாக்கியங்களாகத் தொகுக்கப்பட்டன. ஆனால், 2001இல் அங்கீகரிக்கப்பட்ட 17ஆவது அரசிலமைப்பிற்கான திருத்தத்தின் மூலமும் ஓரளவு பிரஜைகளிடையே கலந்துரையாடல் ஏற்பட்டது. அரசியலமைப்பிற்கான 19ஆவது திருத்தம் பல்வேறு மோதல்களுக்கு மத்தியிலேயே நிறைவேறியது. 1947இல் உருவாகிய அரசியல் பிராணி, மக்களின் குரலுக்கு செவிசாய்க்காமையே இதன்மூலம் பிரதிபலிக்கப்படுகிறது. மக்களின் விருப்பத்தைப் பெற்று தனது ஆசாபாசங்களை மாத்திரம் நிறைவேற்றும் ஒரு முறையையே இங்கு காண்கிறோம்.

அரசியல் பிராணி எனக் கூறிக்கொள்ளும் இவர்களை முழுமையாகப் புறக்கணிப்பது கஷ்டமாயினும், இதனைச் செய்தேயாக வேண்டும். இதற்கான பிரபலம்வாய்ந்த சக்தி பிரஜைகளாகிய எமக்கே உண்டு. இது இன்றைய யுகத்தின் இன்றியமையாக் கடமையாகும். அதற்கான சந்தர்ப்பம் எமக்குக் கிட்டியுள்ளது. அதனை சிறந்த முறையில் உறுதிப்படுத்துவதற்கு, புதிய அரசியலமைப்பை உருவாக்க நாம் எமது கருத்துக்களை வெளியிடுவோம்.

**சிறந்த எதிர்கால சந்ததியினருக்காக வழிசமைத்து, சிறந்த மனிதனை உருவாக்குவதற்கான ஒரு சூழமைவைத் திட்டமிடுவதையே புதிய அரசியலமைப்பின் மூலம் அடிப்படையில் எதிர்பார்க்கப்படுகிறது. புதிய மனிதனை உருவாக்குவதற்கு அவசியமான சுதந்திரம், பாதுகாப்பு, மனித கௌரவம், என்பவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும். ஞானத்தை உருவாக்கிக் கொள்வதற்கு அவசியமான சகல உதவிகளையும்**

**வழங்க வேண்டும். மனிதனையும் இயற்கையையும் நேசிக்கும் மனிதர்கள் உருவாவதாயின் போசாக்கு, பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், மற்றும் அறிவை உத்தரவாதம் செய்ய வேண்டும். அவற்றை இழக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் அவற்றை மீளமைப்பதற்கு நீதி நீடித்து நிலைக்க வேண்டும்.**

## முகவாசகம்

**எந்தவொரு அரசியலமைப்பிற்கும் ஒரு முகவாசம் உண்டு. ஆனால் அதில் என்ன எழுதப்பட்டு இருக்க வேண்டும் என்று கூறும் ஆட்சியாளர்கள் அவற்றைப் பற்றி ஒன்றுமே அறியாதவர்கள்போல் பாசாங்கு செய்வர். முகவாசகம் என்பது அதன் அலங்காரத்திற்காகப் பயன்படுத்தப்படும் சில சொற்பதங்களாகும். மேற்படி சொற்பதங்களை நாம் அவ்வாறு அமையவேண்டும் என்பதற்காகப் பயன்படுத்தவில்லை. இதன் பொருள் ஒட்டுமொத்தமான அரசியலமைப்பின் அத்திவாரமாக அது அமைய வேண்டும் என்று கருதியே நாம் முகவாசகத்தை எழுதுகிறோம். உண்மையிலேயே மக்கள் இக் கொள்கைகள்மீது தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.**

“இலங்கை மக்களாகிய நாம், எமது மக்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட தொடர்ந்தும் நிலவுகின்ற அநீதிகளையும், பாரபட்சங்களையும் அடையாளம் காண்கின்றோம்.

அதற்கமைய வறுமை, போர், துர்நிர்வாகம் என்பவை காரணமாக ஏற்பட்ட விபத்துக்கள் மேலும் ஏற்படாத வகையில் செயற்படுவோம்.”

இலங்கையில் நிலவும் இனத்துவ, மத, கலாசார மற்றும் மொழி

வேறுபாடுகள், பொதுவாக இலங்கையின் கலாசாரத்திற்கு கட்டாயமாக கைவிடமுடியாத ஒரு பகுதியாக நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

பாரபட்சக் கவனிப்பு உருவாவதை நீக்குவதற்கு உசிதமான ஜனநாயக விழுமியங்கள், சமூகநீதி மற்றும் அடிப்படை மனித உரிமைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூக முறைமையைக் கட்டியெழுப்புவோம்.

அரசாங்கம் மக்களின் கட்டாய விருப்பத்தின்மீது உருவாக்கப்படும் ஒன்றாக அமைதல் வேண்டும். அங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து பிரஜைகளும் சட்டத்தின் சமமான பாதுகாப்பை பெறவேண்டியவர்கள் எனவும் ஏற்று அங்கீகரிக்கிறோம்.

அனைத்துப் பிரஜைகளுக்கும் பண்புரீதியான ஒரு வாழ்வு உத்தரவாதப்படுத்தப்படுவதோடு ஒவ்வொரு தனிநபரினதும் ஆற்றல் மேம்படுத்தப்பட வேண்டும்.

சகல அரசுகளுக்கும் இடையிலும் இலங்கை இறைமை கொண்ட சுயாதீன அரசாக இருத்தல் வேண்டுமெனவும் அங்கீகரிக்கிறோம்.

## அத்திவாரமாக அமைந்த விழுமியங்கள்

**விழுமியங்கள் மேற்படி முகவாசகத்தைப் போலவே அலங்காரத்திற்காக அச்சு எழுத்துக்களில் அமைந்திருந்தாலும் என்றுமே பயன்படுத்தப்படாத ஒரு அத்தியாயமாகவே திகழ்கின்றது. விழாக்களின்போது அங்கு குறிப்பிடப்பட்டவை வாசிக்கப்பட்டாலும், அங்கு குறிப்பிடப்படும் குணநலன்கள், சட்டங்கள்,**

**கொள்கைகள் என்பவற்றை நாம் அனுபவிக்க முடியுமா? அதைப்பற்றி கேள்விக்குட்படுத்துவது கூட சிரிப்புக்கு ஏதுவாக அமையலாம்.**

எவ்வாறாயினும் எமது மனநிம்மதிக்காகவேனும் ஒரு சில விழுமியங்களை நாம் குறிப்பிடுவோம்.

இலங்கை ஒற்றையாட்சி, இறைமை ஜனநாயம் என்பவற்றைக் கொண்ட ஒரு குடியரசாகும். பின்வரும் விழுமியங்களும், கொள்கைகளும் அதன் அடிப்படைகளாகும்.

அ. சமத்துவம், மனித உரிமைகள், பன்மைத்துவ சுதந்திரம் என்பவற்றின் பெறுபேறான மனிதஉரிமைகள்மீது அர்ப்பணித்தல்.

ஆ. இனபேதம், மதபேதம் என்பவையற்ற எந்தவொரு இனமும் மற்றுமோர் இனத்தைவிட குறைந்த அல்லது கூடிய கவனிப்புக்கு உள்ளாதல், எந்தவொரு மதமும் மற்றுமொரு மதத்தைவிட கூடுதலான அல்லது குறைந்த மதிப்பைப் பெறுவதைத் தடுத்தல்.

இ. அரசியல் அமைப்பையும் சட்டத்தின் ஆதிபத்தியத்தையும் உயர்ந்த நிலையில் கவனித்தல்.

ஈ. சர்வஜன வாக்கெடுப்பு, தேசிய வாக்காளர்களின் பணிகள், உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவதை உறுதி செய்வதோடு வகைப்பொறுப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பிரதிபலிப்பைக் காட்டுவதையும் அதற்கான ஒத்திசைவையும் உறுதிசெய்யும் பல கட்சிகளின் ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்குதல்.

உ. அரசிலமைப்பின் அதிஉயர் தன்மையை ஏற்றுக்கொள்ளல்.

ஊ. அரசியலமைப்பு இலங்கைக் குடியரசின் அதியுயர் சட்டமாகும். அதற்கு முரணான சட்டங்களோ அல்லது திருத்தங்களோ மேற்கொள்வதை இரத்து செய்ய வேண்டும்.

எ. அதில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் உடன்பாடுகளை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

## அடிப்படை உரிமைகள்

**அடிப்படை உரிமைகள் என்பன மனித உரிமைகள் ஆகும். ஆனால் அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகள் அல்ல. தெரிவு செய்யப்பட்ட ஒருசில மனித உரிமைகள் மாத்திரமே அடிப்படை உரிமைகளாகக் கருதப்படும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மனித உரிமைகள் மீறப்பட்டால் சட்டத்தின்மூலம் அதற்கு பரிகாரம் காணலாம். ஆனால், ஒட்டுமொத்த அரசியலமைப்பு செயற்படும்போது சகல மனித உரிமைகளும் பாதுகாக்கப்படுவது மக்களின் அபிலாஷையாகும். மேற்படி உரிமைகள்மூலம் மனித கௌரவம், சமத்துவம், சுதந்திரம் என்பன பிரதிபலிக்கப்படுகின்றன. ஜனநாயக விழுமியங்கள் பயன்படுத்தப்பட்டால் மாத்திரமே அவற்றை அனுபவிக்க முடியும்.**

அரசு மேற்படி அடிப்படை உரிமைகளை மதிப்பதையும், பாதுகாப்பதையும் மேம்படுத்துவதோடு அவற்றை உத்தரவாதமும் செய்தல் வேண்டும்.

இவற்றில் சில உரிமைகளுக்கு சட்டத்தின்மூலம் நியாயமான மட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட முடியும். அதுபற்றி பின்னர் குறிப்பிடப்படும்.

இந்த உரிமைகளின் இயல்புக்கு அமைய ஒப்படைக்கப்படும் கடமைகளையும், பணிகளையும் மேற்கொள்வதற்கு சகல அரச உத்தியோகத்தர்களும் கடப்பாடு கொண்டுள்ளனர். எனவே, சட்டவாக்கம் – நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை உட்பட அரசின் அனைத்து நிறுவனங்கள்மீதும் மேற்படி கடப்பாடு செயற்படுத்தப்பட வேண்டும்.

## சமத்துவம்

அனைவரும் சட்டத்தின் முன்னே சமமானவர்கள் என்று அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டாலும் சிலர் மற்றையோரைவிட கூடுதலான சமத்துவத்தைப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. அனைவருக்கும் சட்டத்தின் சமமான பாதுகாப்பும் அதன் நன்மைகளையும் பெறுவதற்கு உரிமையுண்டு. அத்தகைய நடைமுறை அமுலில் இருத்தல் வேண்டும்.

சகல உரிமைகளையும் பன்மைத்துவ சுதந்திரங்களையும் அனுபவித்தல், சமத்துவம் என்பதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சமத்துவத்தை அமுலாக்குவதற்கு சிற்சில பரிகாரங்களைத் திட்டமிட வேண்டும்.

**இனம், சமூகப் பாலியல், பாலியல், கர்ப்பம் தரித்தல், திருமணமான, திருமணமாகாத**

**நிலை, இனத்துவ அல்லது சமூகத்தோற்றம், நிறம், வயது, வலதுகுறைவு, மதம், வழிபாடு, நம்பிக்கை, கலாசாரம், மொழி, மற்றும் பிறப்பு ஆகிய விடயங்களில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ எவருமே நியாமற்ற முறையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாரபட்சத்திற்கு அரசு உட்படுத்தக் கூடாது.**

மேற்குறிப்பிட்ட மாற்றங்கள் எந்தவொரு நபராலும் முறைகேடான முறையில் மேற்கொள்ளக் கூடாது என்பதை தேசிய சட்டத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## மனித மாண்பு

சகல மனிதர்களுக்கும் பிறப்பிலேயே கௌரவம் உரித்தாக்கப்படுகிறது. அதற்கு மதிப்பளிப்பதற்கும் அதனை பாதுகாப்பதற்கும் உரிமையுண்டு.

## உயிருக்கான உரிமை

**ஒவ்வொரு நபருக்கும் தனது உயிரைப் பாதுகாப்பதற்கான உரிமை உண்டு. சட்டத்திற்கு முரணாக அதற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு எவருக்கும் அதிகாரம் இருக்கக் கூடாது.**

காணாமற் போகச்செய்யும்போது அடக்குமுறைச் சட்டங்களின் கீழ் துப்பாக்கியால் சுடும்போது, சித்திரவதை செய்யும்போது, நாட்டில் யுத்தம் செய்யத் தீர்மானிக்கும்போது உயிருக்குள்ள உரிமையைப்பற்றி சிந்திக்காமல் சாதாரண மக்களும் அதன்மூலம் விளைவுகளை அனுபவிக்கின்றனர். அதனைத் தடுக்கும் தீர்மானங்களை மேற் கொள்வதும் இவ் உரிமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## சுதந்திரமும் தனிநபர் பாதுகாப்பும்

அனைவரது சுதந்திரமும், தனிநபர் சுதந்திரங்களும், உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். அதற்கு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

அ. தான்தோன்றித்தனமாக அல்லது நியாயமான காரணமின்றி தனிநபர் சுதந்திரத்தைப் பறிக்க முடியாது.

ஆ. வழக்கு விசாரணையின்றி கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருக்க முடியாது.

இ. அரசோ அல்லது தனிப்பட்ட முறையிலோ எவ்வகையிலேனும் சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமல் இருப்பதை உத்தரவாதம் செய்தல் வேண்டும்.

ஈ. எந்தவகையிலேனும் சித்திரவதை செய்யக்கூடாது.

உ. கொடூரமான, மனிதாபிமானமற்ற, மிகக் கேவலமான நிலைமைகளுக்கு எந்தவொரு நபரும் உட்படுத்தப்படக் கூடாது.

**எந்தவொரு நபரும் தனது உடலையும் , உள்ளத்தையும் பற்றி கொண்டுள்ள சுயாதீனத்திற்கு தடைவிதிக்காமல் இருப்பதற்கான உரிமையை உத்தரவாதம் செய்தல் வேண்டும்.**

அ. பிள்ளைகளை உருவாக்குவதா இல்லையா எனத் தீர்மானித்தல்.

ஆ. தனது உடலின் கட்டுப்பாடும், பாதுகாப்பும்

இ. வைத்திய அல்லது விஞ்ஞான பரிசோதனைகளுக்கு இரையாகாமல் இருக்கும் உரிமை இருத்தல் வேண்டும்.

★ **எந்தவொரு நபரும் அடிமையாக வைத்திருக்கப் படுவதற்கோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுவதற்கோ பலவந்தமாக வேலைவாங்கப்படுவதற்கோ ஆளாகக் கூடாது.**

★ **அந்தரங்கத்தன்மை – அனைவருக்கும் அந்தரங்கத்தன்மை பற்றிய உரிமை உண்டு. எனவே சட்டத்திற்கு முரணாக பின்வரும் வகையில் செயற்படக் கூடாது.**

அ. உடலையோ அல்லது வீட்டையோ பரிசீலனை செய்தல்.

ஆ. ஒருவருடைய சொத்துக்களை பரிசோதனை செய்தல்.

இ. ஒருவருடைய சொத்துக்களைக் கைவிடச் செய்தல்.

ஈ. செய்தித் தொடர்பாடலை தடைசெய்தல்.

★ **ஒவ்வொருவருக்கும் தமது மனச்சாட்சி, மதம், சிந்தனை, நம்பிக்கை, மற்றும் கருத்து தொடர்பாக சுதந்திரம் இருத்தல் வேண்டும்.**

## கருத்துச் சுதந்திரம்

ஒவ்வொருவருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு. அதில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும்.

அ. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகச் சுதந்திரம்.

ஆ. தகவல்கள் மற்றும் கருத்துக்களைப் பெறுவதற்கும், வழங்குவதற்கும் உள்ள சுதந்திரம்.

இ. கலைத்துவ படைப்புக்களை சிருஷ்டிக்கும் சுதந்திரம்.

ஈ. கல்வியியலாளர் சுதந்திரமும், விஞ்ஞான ஆய்வுகளுக்கான சுதந்திரமும்.

மேற்கூறிய சுதந்திரங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் உரித்தாக்கப்பட மாட்டாது.

அ. யுத்தத்திற்கு சார்பாக பிரசாரம் செய்தல்.

ஆ. வன்முறையைத் தூண்டுதல்.

இ. இனம், இனத்துவம், சமூகப் பாலியல், மதம் உட்பட்ட விடயங்களைப் பற்றிய பாதகமான தூண்டுதல்களை ஏற்படுத்துதல்.

★ **எல்லோருக்கும் அமைதியாகவும், ஆயுதங்களின்றியும் ஒன்று கூடுவதற்கும், ஊர்வலங்களை நடத்துவதற்கும், மறியற் போராட்டம் செய்வதற்கும், மனுக்களை அனுப்புவதற்கும் சுதந்திரம் இருத்தல் வேண்டும்.**

★ **எல்லோருக்கும் சங்கங்களை நடாத்துவத ற்கான சுதந்திரம் இருத்தல் வேண்டும்.**

## அரசியல் உரிமைகள்

★ ஒவ்வொரு பிரஜைக்கும் தான் விரும்பிய அரசியலைத் தெரிவு செய்வதற்கு உரிமை உண்டு. அதற்குப் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும்.

அ. அரசியற் கட்சி ஒன்றை உருவாக்குதல்.

ஆ. அரசியற் கட்சியின் நடவடிக்கைகளில் பங்குபற்றுதல் மற்றும் அக்கட்சிக்கான உறுப்பினர்களை அணிதிரட்டல்.

இ. மேற்படி அரசியற் கட்சியின் சார்பில் அல்லது கருத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் செய்தல்.

★ **அரசியலமைப்பிற்கு அமைய உருவாக்கப்படும் எந்தவொரு சட்டவாக்கச் சபைக்கும் சுதந்திரமாகவும், நியாயமாகவும் குறிப்பிட்ட காலஎல்லையில் இடம்பெறும் தேர்தல்களைப் பெறுவுதற்கு சகல பிரஜைகளுக்கும் உரிமை உண்டு.**

★ **இத்தகைய தேர்தல்களின்போதும் அந்தரங்க மாகத் தனது வாக்கைப் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு வயதுவந்த பிரஜைகளுக்கும் உரிமை உண்டு.**

★ **பதவிகளுக்கு போட்டியிட முன்வருதலும், அப்பதவிகளில் வெற்றி பெற்றால் அப் பதவிகளை வகிப்பதற்கும் உரிமை உண்டு.**

★ **எந்தவொரு பிரஜையினதும் பிரஜா உரிமையை இல்லாதொழிக்கக் கூடாது.**

## நடமாடும் சுதந்திரமும் வசிக்கும் சுதந்திரமும்

1. ஒவ்வொரு நபருக்கும் நாட்டினுள்ளே நடமாடும் சுதந்திரம் உண்டு.
2. நாட்டில் இருந்து வேறொரு நாட்டிற்குச் செல்வதற்கு ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு.
3. மீண்டும் நாட்டிற்கு வருவதற்கும், நாட்டில் தாம் விரும்பிய இடத்தில் வசிப்பதற்கும் உரிமையுண்டு.
4. ஒவ்வொரு பிரஜையும் தனக்கு ஒரு கடவுச் சீட்டைப்பெற முடியும்.

★ **அனைத்து பிரஜைகளுக்கும் சட்டவிரோதமற்ற நிபுணத்துவத் தொழிலில் அல்லது தொழில் முயற்சிகளில் ஈடுபட உரிமையுண்டு.**

# ஊழியர் உறவுகள்

**ஒவ்வொருவருக்கும் நியாயமான முறையில் சேவையில் ஈடுபடும் உரிமை உண்டு.**

அ. ஒவ்வொரு ஊழியருக்கும் தொழிற்சங்கத்தில் இணை வதற்கும், தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும்.

ஆ. மேற்படி தொழிற்சங்கங்களின் நிகழ்ச்சித்திட்டங்களையும், ஸ்தாபன நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

இ. தொழிற்சங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய வேலை நிறுத்தம் செய்வதற்கு உரிமையுண்டு.

ஒவ்வொரு தொழில்தருநருக்கும்

அ. தொழில்தருநருக்கான அமைப்பை உருவாக்குவதற்கும்

ஆ. அவற்றை ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டுவதற்கும் உரிமையுண்டு.

ஒவ்வொரு தொழிற்சங்கத்திற்கும் தொழில்தருநரின் அமைப்பிற்கும்

அ. தமது நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கும், ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டுவதற்கும். இருதரப்பினருக்கும் ஒன்றிணைந்து சம்மேளனங்களை உருவாக்குவதற்கும்

ஆ. இருதரப்பினரும் ஒன்றிணைந்து ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கும் கூட்டாக பேரம்பேசுவதற்கும், இருதரப்பினரதும் பாதுகாப்பை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இ. சட்டத்தின் மட்டுப்பாடுகளின்கீழ், மேற்படி பாதுகாப்பு நடவடிக்கைகளையும், கூட்டு ஒப்பந்தங்களையும் தேசிய சட்டங்கள் அங்கீகரிக்க வேண்டும்.

## சுற்றாடல்

1. அனைவருக்கும், சிறந்த சுகாதார உரிமைக்கும் நல்வாழ்விற்கான சுற்றாடல் உரிமையுண்டு.

2. சுற்றாடல் இன்றைய சந்ததியினரதும் எதிர்கால சந்ததியினரதும் நல்வாழ்விற்கு அமைய வேண்டும்.

அ. சுற்றாடல் அழிவையும், மாசுபடுத்தலையும் தவிர்த்தல்.

ஆ. நியாயமானதும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான இயற்கை வளங்களின் பயன்பாடு., நிலைபேறான வாழ்விற்கான உத்தரவாதம்.

## சொத்துக்கள்

**அனைவரும் தமக்கு அத்தியாவசியமான சொத்துக்களை உரித்தாக்கிக்கொள்ளும் சுதந்திரத்தையும் வசதிகளையும் கொண்டுள்ளனர்.**

- தான்தோன்றித்தனமாக எவருடைய சொத்துக்களின் உரிமையையும் இல்லாதொழிக்க முடியாது.

- சட்டத்திற்கு அமைவாகவே சொத்துக்கள் பயன்படுத் தப்பட வேண்டும்.

- பொதுநன்மை, பொதுத்தேவைகள் என்பவற்றிற்கு காணிகளை சுவீகரிப்பதாயின் நீதிமன்றத்

தீர்ப்பின்மூலமே அதனை மேற்கொள்ள முடியும். நியாயமான இழப்பீடும் அதற்கு வழங்கப்பட வேண்டும்

- காணிகள் உட்பட சகல இயற்கை வளங்களும் பொதுஉரிமைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.. நிர்வாகிகள் தாம் விரும்பியவாறு பயன்படுத்துவதோ அல்லது உடமையாக்கிக் கொள்வதோ செய்யக்கூடாது

- ஆகாயம், பூமி, மண், நீர், காற்று, ஆறு, குளம், குட்டை, கங்கை, கடல், மரஞ்செடி கொடிகள், மிருகங்கள், பூச்சி புழுக்கள் ஆகிய அனைத்தும் பொதுச் சொத்துக்கள் என்று உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவை பொதுநன்மைக்காகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பாராளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டும்.

## வீடமைப்பு வசதிகள்

ஒவ்வொரு நபருக்கும் ஒரு வீடு கிடைக்கக்கூடிய வகையில் அவசியமான சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

நியாயமான நீதிமன்றத் தீர்ப்பு அல்லது மாற்று வசிப்பிடமின்றி, எந்தவொரு நபரினதும் வீட்டு உரிமையை இல்லாதொழிக்கக் கூடாது.

## சுகாதாரம்

1. இனப்பெருக்கச் சுகாதாரம் உட்பட அனைத்து சுகாதார சேவைகளையும் பெறுவதற்கும் போதியளவு உணவு மற்றும் குடிநீருக்கான சமூக பாதுகாப்பைப் (தம்மில் தங்கிவாழ்வோர் மாத்திரம்) பெறுதல்.

2. ஒவ்வொருவரும் இவற்றைப் பெறுவதற்கு அரசு தமது வளங்களுக்கு அவசியமான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

   (வளங்களின் அளவு என்று கூறும்போது தினசரி வளங்கள் இல்லையெனக் கூறி வகைப்பொறுப்பில் இருந்து விடுபடுவது அல்ல. அவற்றை உருவாக்கிக்கொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டு பின்னர் போதியளவிற்கு அவற்றை வழங்குவதாகும். இதுதொடர்பாக வழங்கப்படும் உறுதிமொழிகள் அமுலாக்கப்படா விட்டால் அதற்கான பரிகாரங்கள் இருத்தல் வேண்டும்.)

3. எவருக்கும் அவசர வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்வதற்குள்ள உரிமையை நீக்கக் கூடாது

## சிறுவர்கள்

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை தொடர்பான சமவாயங்களில் குறிப்பிடப்படும் அனைத்து விடயங்களும் – சிறுவர்களின் உரிமைகளை சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தில் இலங்கை அரசும் கையொப்பமிட்டுள்ளது.

## கல்வி

அனைவருக்கும் அடிப்படைக் கல்வி உரிமைகள் உண்டு. மேலதிக கல்வியைப் பெறுவதற்கு நியாயமான சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும். அதேசமயம் அதனை இலகுவாகப் பெறக்கூடியதாகவும் இருக்க வேண்டும். (பிள்ளைகளின் அடிப்படைக் கல்வி வளர்ந்தோருக்கு சுமையாகவும், தொந்தரவாகவும் இருக்கக் கூடாது.)

அனைவருக்கும் தாம் விரும்பிய அரசகரும மொழியை அல்லது பிள்ளைகள் தெரிவுசெய்யும் மொழியில் அரச நிறுவனங்களில் கல்வியைப் பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதற்கென அரசு உரிய நடைமுறை செயற்பாடுகளை திட்டமிட வேண்டும். அத்திட்டங்களின்போது:

அ. சமநீதி

ஆ. நடைமுறைச் சாத்தியம்

இ. கடந்த காலத்தில் இருந்து நிலவிய முரண்பாடுகளுக்கு பரிகாரம் காணக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

எல்லோரும் தமது சொந்தச் செலவில் கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கும் அவற்றில் கல்வி கற்பதற்குமான உரிமையைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். அதன்போது

அ. இன, மத, அந்தஸ்திற்கு அமைய பாரபட்சங்கள் இடம்பெறக்கூடாது.

ஆ. அரசு அங்கீகரித்த அதனோடு ஒத்திசைவான நிறுவனங்களாக் இருத்தல் வேண்டும்.

இ. அரச நிறுவனங்களின் கல்வியைவிட தரநியமங்களில் தனியார்துறை குறையக்கூடாது.

## மொழியும் கலாசாரமும்

அனைவருக்கும் தாம் தெரிவுசெய்யும் மொழியைப் பயன்படுத்துவதற்கும், தாம் விரும்பும் கலாசாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமை இருத்தல் வேண்டும். மேற்படி தெரிவு சட்டத்திற்கு முரணாக அமையக்கூடாது.

இங்கு அரசகரும மொழிக் கொள்கை முழுமையாக செயற்படுத்தக்கூடிய சுற்றாடல் அமைய வேண்டும்.

## கலாசார, மத மற்றும் மொழிவாரியான இனப்பிரிவுகள்

குறித்துரைக்கப்பட்ட கலாசார, மத, மொழி பிரிவினருக்கு உரித்தான நபர்களுக்கு மேற்படி மக்கள் பிரிவின் ஏனையோருடன் தமது மதத்தை, மொழியைப் பயன்படுத்துவதற்கும், கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் உரிமை இருத்தல் வேண்டும்.

அதேசமயம் மேற்படி கலாசார, மத மற்றும் மொழிரீதியான சங்கங்களை அமைப்பதற்கும், அவற்றில் இணைவதற்கும், சிவில் சமூகத்தின் ஏனைய அமைப்புக்களுடன் செயற்படுவதற்கும் உரிமை உண்டு.

## தகவல்களைப் பெறல்

- அனைவரும் அரசுக்கு உரித்தான எந்தவொரு தகவல்களையும் அனைவரும் பெறக்கூடிய உரிமை இருத்தல் வேண்டும்.

- ஒரு உரிமையை அனுபவிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு அவசியமான தகவல் வேறு ஒரு நபரிடம் இருந்தாலும் அதனைப் பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால் உரிமைக்கு முரணான வகையில் அவ்வாறு பெறமுடியாது.

## நியாயமான நிர்வாக சேவை

சட்டபூர்வமானதும் நியாயமானதுமான நிர்வாக சேவையைப் பெறுவதற்கு அனைத்து பிரஜைகளுக்கும் உரிமை உண்டு.

நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக ஒரு பிரஜையின் உரிமைகள் மீறப்பட்டால் அதற்கான காரணங்களை எழுத்துமூலம் பெறும் உரிமை அந்நபருக்கு இருத்தல் வேண்டும்.

உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு ஏற்புடைய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதேசமயம் அவற்றைப் புலனாய்வு செய்வதற்கு பக்கச்சார்பற்ற நடுத்தீர்ப்புச் சபையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

மேற்படி உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான உரிமைகள் சட்டபூர்வமாக அரசுக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அதற்கு வினைத்திறன் கொண்ட நிர்வாக சேவை இருத்தல் வேண்டும்.

## நீதிமன்றப் பரிகாரங்கள்

அனைவருக்கும் தாம் எதிர்நோக்கிய ஒரு பிணக்குத் தொடர்பாக நீதிமன்றத்தில் முறையீடு செய்வதற்கும் நியாயமான பாரபட்சமற்ற பகிரங்க வழக்கு விசாரணையைப் பெறுவதற்கும் உரிமையுண்டு. அதேசமயம் தகுதியான சந்தர்ப்பத்தில் வேறு ஓர் சுயாதீனமான நடுத்தீர்ப்புச் சபையின்மூலம் தீர்வினைப் பெறுவதற்கும் உரிமையுண்டு.

கைதுசெய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள்

**1. குறித்துரைக்கப்பட்ட ஒரு குற்றம் செய்யப்பட்டதாக கைது செய்யப்படும் தனிநபர்களுக்கு பின்வரும் உரிமைகள் உண்டு.**

அ. விடையளிக்காமல் மௌனமாக இருத்தல்.

ஆ. அவ்வாறு மௌனமாக இருக்கும் உரிமையுண்டு என்பதுபற்றியும், மௌனமாய் இருக்காதபோது ஏற்படக்கூடிய விளைவுகள் அறிவிக்கப்படவும் வேண்டும்.

இ. தனக்கு எதிரான ஓர் சாட்சியாக பயன்படுத்தக்கூடிய குற்றத்தை ஏற்பதற்கு நிர்பந்திக்கக் கூடாது.

ஈ. இயன்றளவு விரைவில் சட்டத்திற்கு அமைய நீதிமன்றம்முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

உ. கைதுசெய்யப்பட்டு முதலாவது நீதிமன்ற திகதியிலேயே குற்றச்சாட்டுக்களை சமர்ப்பித்தல் அல்லது தடுப்புக் காவலில் வைப்பதற்கான காரணங்களை அறிவித்தல் அல்லது விடுவிக்கப்படுதல்.

ஊ. நியாயமான காரணங்கள்மீது நீதிமன்றத்தின் கருத்திற்கு அமைய தடுத்துவைக்கப்படாமல் விடுவிக்கப்படுதல்.

**2. தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதி உட்பட தடுத்துவைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், பின்வரும் உரிமைகள் இருத்தல் வேண்டும்.**

அ. தடுத்து வைப்பதற்கான காரணங்களை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

ஆ. சட்ட உதவிகளைப் பெறுவதற்கான உரிமை உண்டென்பதை அறிவித்தல் வேண்டும்.

இ. அரச சட்டத்தரணியின் உதவியை நாடமுடியுமென்பதை உடனடியாக அறிவித்தல்.

ஈ. தடுப்புக் காவலில் வைத்தல் சட்டத்திற்கு முரணானது எனக் கருதினால் நீதிமன்றத்தின்முன் சென்று விடுதலை பெறுதல்.

உ. தடுத்து வைக்கப்படுதல் மனித கௌரவத்திற்கு தகுந்த முறையில் அமைதல் வேண்டும். அரச செலவில் இடவசதி, தகுதியான உணவு, வைத்திய சேவைகள், புத்தகங்கள் என்பவற்றை வழங்க வேண்டும்.

ஊ. தடுப்புக் காவலில் உள்ள நபரின் மனைவி அல்லது கணவன், நெருங்கிய உறவினர், அவர் விரும்பும் மதத் தலைவர், தாம் விரும்பும் வைத்தியர் ஆகியோருடன் தொடர்பாடல் நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

**3. குற்றம் சுமத்தப்பட்ட ஒவ்வொரு நபரும் நியாயமான வழக்கு விசாரணைக்கும் பின்வரும் உரிமைகளுக்கும் உரித்துடையவர்.**

அ. தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு விடை பகர்வதற்குப் போதிய தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆ. தனது பாதுகாப்பிற்காகத் தயார்படுத்துவதற்கு காலமும், வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

இ. தாமதமின்றி வழக்கு விசாரணையை ஆரம்பிக்கவும், முடிவுறுத்தவும் வேண்டும்.

ஈ. வழக்கு விசாரணைக்கு வருவதற்கான சுதந்திரம்

உ. தனக்காக சட்டத்தரணியின் சேவையைப் பெறமுடியும் என்பதை உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

ஊ. ஏதாவது பாரபட்சம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தில் அரச சட்டத்தரணியின் உதவியைப் பெறமுடியும் என்பது அறிவிக்கப்பட வேண்டும்.

எ. குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றமற்றவர் எனக் கருதப்படுதல் வேண்டும், விடையளிக்காமல் இருத்தல், விசாரணை இடம்பெறுகையில் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாது.

ஏ. சாட்சிகளை முன்வைத்தலும் ஏனைய சாட்சிகளுக்கு சவால் விடுத்தலும்.

ஐ. தான் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் வழக்கு விசாரணை செய்யப்படல் வேண்டும் அல்லது தகுதியான மொழிபெயர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

ஒ. குற்றம் செய்யப்பட்டபோது அல்லது செய்யப்படாத சந்தர்ப்பத்தில் உள்நாட்டு அல்லது சர்வதேச சட்டத்தின்கீழ் குற்றமாகக் கருதப்படாத விடயத்திற்கு குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கக் கூடாது.

ஓ. முன்னர் குற்றவாளியாக்கப்பட்ட அல்லது விடுவிக்கப்பட்ட விடயத்திற்கு மீண்டும் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படக் கூடாது.

ஔ. குற்றம் இடம்பெற்ற சந்தர்ப்பம் மற்றும் வழக்கு விசாரணையின் பின்னர் தண்டனை வழங்கப்பட்ட சந்தர்ப்பம் இரண்டுக்குமிடையில் மாற்றம் ஏற்பட்டிருந்தால், குறைந்த தண்டனையே வழங்கப்பட வேண்டும்.

க. உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யும் உரிமை.

**4. இவ்வுரிமைகளின்கீழ் ஏதாவது தகவல் ஒருவருக்கு கொடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அதனை அந்நபர் அறிந்த மொழியிலேயே வழங்கப்பட வேண்டும்.**

**5. இந்த உரிமைகள் மீறப்படும் வகையில் பெறப்பட்ட சாட்சி முன்வைக்கப்படின் வழக்கு விசாரணை ஞாயமாக இடம்பெற வேண்டும், நீதி நிர்வாகத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடுமாகையால் அதனைப் புறக்கணிக்க வேண்டும்.**

## உரிமைகளை மட்டுப்படுத்துதல்

மேற்படி உரிமைகளை சாதாரண சட்ட நடைமுறைக்கு உடன்பாடான வகையில் மட்டுப்படுத்த முடியும். மேற்படி மட்டுப்பாடுகள் மனித கௌரவம், சமத்துவம் மற்றும் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகத்திற்குப் பொருத்தமாக இருப்பின் மாத்திரமே அனுசரிக்கப்பட வேண்டும். அதன்போது பின்வரும் விடயங்கள் கவனத்தில்கொள்ளப்பட வேண்டும்.

அ. உரிமையின் இயல்பு.

ஆ. மட்டுப்பாடுகளை நீக்கும் முக்கியத்துவம்.

இ. மேற்படி மட்டுபாட்டின் இயல்பும் அதன் அளவும்.

ஈ. மட்டுப்பாட்டினதும் அதன் குறிக்கோளினதும் உறவு.

உ. குறைந்த மட்டுப்பாடுகளின்மூலம் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளல்.

மேற்கூறிய விடயத்திற்கு அமைய அல்லது அரசியலமைப்பின் உறுப்புரிமைகளுக்கு அமைய அல்லது வேறு சட்டத்தின்மூலம் மேற்படி உரிமைகளை மட்டுப்படுத்தக்கூடாது.

## விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகள்

சிறுவர்கள் தொடர்பாக ஐ. நா சமவாயங்களுக்கு அரசு கைச்சாத்திட்டு இருந்தாலும் சிறுவர்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு போதுமானதாக அமையவில்லை.

மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு நிறுவனங்களில் பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் கிடைக்கவேண்டிய பிரதிநிதித்துவம் போதாது. எனவே, அவர்களுக்கு வழங்க வேண்டிய பிரதிநிதித்துவம் மந்தகதியிலேயே இடம்பெறுகிறது.

மேலும் விசேட திறமை கொண்டோர் (மாற்றுத் திறனாளிகள்), சிறுபான்மை இனங்கள், ஓரங்கட்டப்பட்ட மக்கள் பிரிவினர், ஆதிவாசிகள் (பழங்குடி மக்கள்) முதியோர் பற்றிய சர்வதேச சமவாயங்களுக்கு உடன்படவேண்டிய அதேவேளை, அவர்களிடம் இருந்து சமூகம் பெறக்கூடிய பிரயோசனங்களையிட்டு ஓர் திட்டம் இருத்தல் வேண்டும்.

## அவசரகாலச் சட்டம்

அண்மைக் காலத்தில் அவசரக்காலச் சட்டமே இலங்கையின் மிகக் கொடூரமான அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டது. சில சமயங்களில் அவசரகாலச் சட்டங்களின் குறிக்கோள்களுக்க அப்பால் சென்று பழிவாங்குவதற்கும், நேரடியான ஒடுக்குமுறைக்கும் அவை பயன்படுத்தப்பட்டன. உதாரணம் 1980 பொதுவேலை நிறுத்தம். அதன்போது இரப்பர் பால் வெட்டுவதும் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

தற்போது பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நிறைவேற்றுத்துறை பிறப்பிக்கக்கூடிய ஒழுங்குவிதிகளுக்கு மட்டுப்பாடு இருத்தல் வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிக்கக் கூடிய பல விடயங்கள் உண்டு. அதாவது: யுத்தம், ஆக்கிரமிப்பு, கிளர்ச்சி, கலகங்கள், குழப்பங்கள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் வேறு பொதுவான அவசரகாலச் சட்டங்கள்.

**அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிக்கும்போது மேற் குறிப்பிட்ட அனர்த்த சந்தர்ப்பத்தைத் தவிர்ப்பதற்காக மாத்திரம் அமைய வேண்டும். அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி அது செல்லுபடியாகக் கூடிய காலஎல்லையையும் நிர்ணயித்தல் வேண்டும். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு 2, 3 மாதங்களுக்கு மாத்திரம் அது மட்டுப்படுத்தப்பட வேண்டும். அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதாயின் பாராளுமன்றம் மாத்திரம் அதனைச் செய்ய வேண்டும். ஆனால், இலங்கையைப் பொறுத்த வரையில் பாதுகாப்பு அமைச்சரின் முன்மொழிவு எதுவித விசாரணையுமின்றி அங்கீகரித்தமையையே நாம் காணக்கூடியதாக உள்ளது. அத்தகைய பாராளுமன்றம் மக்களுக்கு சார்பானதாக இருக்க மாட்டாது. பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டாலும் எதிர்கட்சிகளின் கருத்துக்களுக்கும் ஓர் அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.**

**அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துதல், நீடித்தல் அதன் செல்லுபடியான தன்மை என்பவற்றை கேள்விக்கு உட்படுத்தும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு இருத்தல் வேண்டும்.**

அவசரகாலச் சட்டத்துடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலமும், சர்வதேசச் சட்டங்கள் மூலமும், அரசு கொண்டுள்ள கடப்பாடுகள் மூலமும் உரிமைகள் மீறப்படுகின்றனவா என நீதிமன்றம் வரைவிலக்கணம் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

அவசரகாலச் சட்டத்துடன் ஏனைய ஒடுக்குமுறைச் சட்டங்களையும் பயன்படுத்துவதனால் என்றுமே மீறமுடியாத உரிமைகள் மீறப்படுவதாயின் அவற்றை கேள்விக்குட்படுத்தும் சுதந்திரமும் இருத்தல் வேண்டும். உதாரணமாக உயிர்வாழ்வதற்கான உரிமை, மனித கௌரவம், சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படாமை என்பன மீறமுடியாத உரிமைகளாகும்.

## மனித உரிமைகள் ஆணைக்குழு

**தற்போதைய ஆணைக்குழுச் சட்டத்தின் 10 மற்றும் 11 ஆகிய உறுப்புரைகள்மூலம் பரந்துபட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டு இருப்பினும், அதன் பரிந்துரைகள் (தீர்ப்புரைகள்) வலுவாக்கம் பெறாமை காரணமாக உரிமை மீறல்கள் பற்றிய ஆய்வுகளின்போது நீதி நியாயம் நிலைநாட்ட முடியாத ஒரு நிலைமை நிலவுகிறது. இந்நிலைமையில் ஒரு மாற்றம் நிகழவேண்டும்.**

பின்வரும் நடவடிக்கைகளை நடைமுறைக்கு ஏற்ற வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

அ. நாட்டின் மனித உரிமைகளை மதிக்கும் மேம்படுத்தும் நடவடிக்கைகள். நாட்டில் மனித உரிமை கலாசாரத்தை மேம்படுத்த வேண்டிய நடவடிக்கைகள்.

ஆ. ஆண் பெண் சமத்துவம் மற்றும் சமநீதியை மேம்படுத்துவதோடு தேசிய அபிவிருத்தியின்போது பால்நிலை பிரதான நீரோட்டத்தின் ஒரு விடயமாக அமுல்படுத்த வேண்டும்.

இ. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மனித உரிமைகளை அனுசரித்து பாதுகாத்து மேம்படுத்துதல்.

ஈ. தேசிய பாதுகாப்புத்துறைகள் உட்பட, நாட்டு மக்களின் வாழ்க்கையில் மனித உரிமைகளை அனுசரிக்கும் நிலைமையைப்பற்றிக் கண்காணித்தல், பரிசீலனை செய்தல் மற்றும் அறிக்கையிடல்.

உ. மனித உரிமைகள் (அடிப்படை உரிமைகளுக்கு மாத்திரம் மட்டுப்படாமல்) மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு உரிய பரிகாரங்களைக் காணுதல்.

ஊ. முறைப்பாடுகள் மூலமும், ஆணைக்குழுவின் இடையீடு மூலமும் மனித உரிமை மீறல்களைப் பற்றிய விசாரணைகளையும், ஆய்வுகளையும் மேற்கொண்டு குறித்துரைக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கு பரிந்துரைகளைச் செய்தல்.

எ. மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் மற்றும் சமவாயங்கள்மூலம் ஏற்படும் கடப்பாடுகள்பற்றிய முக்கிய நிறுவனமாகச் செயற்படுதல்.

ஏ. எந்தவொரு அரச நிர்வாக நிறுவனமாயினும் ஒரு செயலைச் செய்தல் அல்லது செய்யாதுவிடல், உசிதமற்றது அல்லது பக்கச் சார்பானது என சந்தேகம் ஏற்பட்டால் அதுபற்றிய பரிசீலனையை மேற்கொள்ள வேண்டும்.

ஐ. அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துதல், அநீதியான கவனிப்பு, தெளிவான நியாயமற்ற நடவடிக்கைகள் அல்லது சட்டத்திற்கு முரணான ஒடுக்குமுறை, கவனிக்காது விடல் போன்ற அரச அதிகாரிகளின் நடத்தைபற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.

ஒ. மேற்கூறிய பரிசீலனைகள் மற்றும் விசாரணைகளின் பின்னர் உரிய பரிகாரங்களைக் காணுதல்.

ஓ. சட்டத்தின்மூலம் ஒப்படைக்கப்படும் வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- உரிமைகள் பற்றிய அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் எந்தவொரு உரிமையேனும் மீறப்பட்டால், அல்லது இல்லாதொழித்தால் அல்லது அவ்வாறு இடம்பெறுவதற்கு அண்மித்திருந்தால் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்வதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு.

- இந்த உரிமையை வலுவாக்கம் பெறச்செய்ய சட்டங்களை இயற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பு கூறப்படுகிறது.

## மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதும் தேர்தல் முறையும் ஏனைய நடைமுறைகளும்

**தேர்தல்முறை பின்வரும் கொள்கைகளுக்கு அமைவாக இடம்பெறல் வேண்டும்.**

அ. மேற்குறிப்பிட்டவாறு பிரஜைகளுக்கு அரசியல் சுதந்திரம் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

ஆ. பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங் களுக்குத் தெரிவுசெய்யப்படும் ஆண் அல்லது பெண் உறுப்பினர்கள் 2/3 இற்கு அதிகரிக்கக் கூடாது.

இ. வலது குறைந்தோரும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

ஈ. நியாயமான பிரதிநிதித்துவத்திற்கும், சமத்துவத்திற்கும் சர்வஜன வாக்கெடுப்பு பயன்படுத்தப்பட வேண்டும்.

உ. தேர்தல்கள் சுதந்திரமானதாகவும், நீதியானதாகவும் அமைய வேண்டும்.

**இரகசிய வாக்கு**

இம்சை, அச்சுறுத்தல், முறையற்ற அழுத்தங்கள் மற்றும் ஊழல்கள் அற்றதாக இருத்தல் வேண்டும்.

சுயாதீனமான ஆணைக்குழுவினால் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

**வெளிப்படைத் தன்மையாக இருத்தல் வேண்டும்.**

இந்த நடவடிக்கைகள் பக்கச் சார்பற்ற, நடுநிலையான, வினைத்திறன் கொண்ட, தவறற்ற வகைப்பொறுப்புக் கூறக்கூடிய வகையில் அமைய வேண்டும்.

- தேர்தல்களை நடத்துதல், வாக்காளர்களைப் பதிவுசெய்தல், தேர்தல் தொகுதிகளை நிர்ணயித்தல் என்பன தொடர்பாக பாராளுமன்றத்தில் தனியான சட்டதிட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.
- தற்போது தேர்தலில் பங்குபற்ற முடியாது கைவிடப்பட்டுள்ள, வெளிநாடுகளில் தொழில்புரிவோர், சிறைக் கைதிகளாக இருப்போர், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவோர் ஆகியோர் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். விசேட தேவை உள்ளோர் (மாற்றுத்திறனாளிகள் –வலது குறைந்தோர்) ஆகியோர் தமது வாக்கை வழங்கக் கூடிய வழிவகைகளை மேற்கொள்ளுதல்.
- வாக்காளர்களைப் பதிவு செய்தல்.

**வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான தகைமைகள் :**

அ. 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கை பிரஜையாக இருத்தல்.

ஆ. பதிவின்போது மனநோயினால் பீடிக்கப்படாமல் இருத்தல்.

இ. கடந்த 5 ஆண்டுகளுக்குள் தேர்தல் குற்றத்திற்காக தண்டனை பெறாமல் இருத்தல்.

- மேற்படி தகைமைகளைக் கொண்டோர் ஒரு வசிப்பிடத்தில் மாத்திரம் தம்மைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும்.

- **தேர்தல் வேட்பாளர்கள்**

  தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கும், தேர்தல் ஒழுக்கநெறிமுறைகளை அனைத்து வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் அனுசரித்து செயற்பட வேண்டும்.

  இலங்கையின் எந்தவொரு பிரஜையும் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிட முடியும். ஆனால் தேர்தல் நாளுக்கு 3 மாதங்களுக்குள் வேறொரு அரசியல் கட்சியின் உறுப்பினராக இருத்தல் கூடாது.

## அரசியற் கட்சிகள்

அ. ஒவ்வொரு அரசியற் கட்சியும் இனத்தை, மதத்தை முதன்மைப்படுத்தும் குறிக்கோள்களைத் தவிர்த்து தேசிய பண்புகளுடனான கட்சியாக இருத்தல் வேண்டுமென ஒரு சட்டத்தின்மூலம் நியமிக்க முடியும்.

ஆ. கட்சியின் நிர்வாகம் ஜனநாயக ரீதியாக இருத்தல் வேண்டும்.

இ. தேசிய ஐக்கியத்தை மேம்படுத்த வேண்டும்.

ஈ. அரசியற் கட்சிகளுக்குள் நல்லாட்சிக் கொள்கைகள் அனுசரிக்கப்பட வேண்டும்.

உ. கட்சி உத்தியோகத்தர்களுக்கான தேர்தல்கள் ஜனநாயக ரீதியாக அமைய வேண்டும்.

ஊ. அனைவருடைய அரசியல் செயற்பாட்டையும் மதிக்க வேண்டும். அதன்போது சிறுபான்மையினரின் வேறு ஆற்றல்கள் கொண்டோரின் ˙உரிமைகளும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

எ. மனித உரிமைகள், பல்வகை சுதந்திரங்கள், பால்நிலை சமத்துவம், நீதி, நியாயம் என்பவற்றை மதிக்க வேண்டும்.

ஏ. அரசியலமைப்பின் குறிக்கோள்களுக்கும், சட்டத்தின் ஆதிபத்தியத்திற்கும் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்.

ஐ. அரசியற் கட்சிகளுக்கு உரித்தான ஒழுக்க நெறிமுறைகளை மேம்படுத்தி அனுசரித்தல் வேண்டும்.

- **பின்வரும் விடயங்களுக்காக எந்தவொரு அரசியற் கட்சியும் அமைக்கப்படக் கூடாது.**

அ. இனம், நிறம், மதம், மொழி, ஆண் அல்லது பெண், பிரதேசம் என்ற வகையில் மட்டுப்பாடுகளின்றி மேற்கூறிய விடயங்களில் ஒன்றின்மீதாவது பகைமையைப் பரப்புதல்.

ஆ. மேற்படி கட்சியின் உறுப்பினர்கள் இம்சைமீது ஊக்குவிக்காதவர்களாகவும், அதற்கு ஒத்துழைக்கா

தவர்களாகவும் தமது எதிரிகளையோ அல்லது வேறு நபர்களையோ அசுறுத்தாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இ. ஆயுதம் ஏந்திய குழுக்களை உருவாக்குதல் அல்லது பராமரித்தல்.

ஈ. இலஞ்சம் அல்லது வேறுவகையான ஊழல்களில் ஈடுபடாமை.

உ. சட்டரீதியாகப் பெறக்கூடியவை தவிர்ந்த தேர்தல் இயக்கங்களுக்காக வளங்களைப் பயன்படுத்துதல்.

பாராளுமன்றத்தால் இயற்றப்படும் ஒரு சட்டத்தின்மூலம் மேற்படி கட்சிகளுக்கு அரச ஊடகங்கள்மூலம் போதிய இடவசதியை வழங்குதல்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை சுதந்திரமாக நடத்துவதற்கு போதிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

அரசியற் கட்சிகளை ஒழுங்குமுறையில் அமைத்தல்.

அரசியற் கட்சிகளின் பணிகளை முறைமையாக்குதல்.

அரசியற் கட்சிகளை மேற்பார்வை செய்தல்

அரசியற் கட்சிகளின் நிதி, கணக்கு என்பவற்றை கண்காணித்தல்.

பொதுமக்களின் சொத்துக்களைப் பாவிக்காமை.

## அரசியற் கட்சிகளில் இருந்து விலகிச் செல்லுதல்

- ஓர் அரசியற் கட்சியின் சார்பில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்பு வேறொரு கட்சியில் இணைந்தால், அவரது பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாதொழிக்கப்படும் என்ற சட்டம் அவசியமாகும்.

- இடைத்தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முடியும்.
- எமது தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது பதவிக்காலம் முடியும்வரை அப்பதவியை வகிக்க முடியும். இடைக்காலத்தில் அவரை திருப்பி அழைக்க முடியாது. பாராளுமன்ற உறுப்பினரை நியமிப்பதற்கும், நீக்குவதற்கும் பொதுமக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும். அதற்கான வாக்குரிமை அவர்களுக்கு இருத்தல் வேண்டும்.

## அரச சேவை

**அரச சேவையில் நிலவவேண்டிய பண்புகளும், கொள்கைகளும் பின்வருமாறு அமைய வேண்டும்.**

அ. உயர்மட்ட நியமம் கொண்ட தொழில்வாண்மையும், ஒழுக்க நெறிமுறைகளும்.

ஆ. வினைத்திறன் கொண்ட, பயனுறுதி வாய்ந்த, சிக்கனமான வளப் பயன்பாடு.

இ. சேவை வழங்கும்போது துரிதமாகப் பிரதிபலித்தல், பயனுறுதிவாய்ந்தமை, நடுநிலைமை வகித்தல், நியாயமாக நடந்துகொள்ளுதல்.

ஈ. கொள்கைகளை உருவாக்கும்போது பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுதல்.

உ. நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக வகைப்பொறுப்பு கூறல்.

ஊ. காலத்திற்கேற்ப, சரியான தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கு வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருத்தல்.

எ. மேற்குறிப்பிட்ட அண்மித்த இரண்டு விடயங்களுக்கு கட்டுப்பட்ட நியமனங்களும் பதவி உயர்வுகளும் வழங்கும்போது தகைமைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

ஏ. பல இனங்களையும், மதங்களையும் பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும்.

ஐ. அரச சேவையின் சகல மட்டங்களிலும் நியமனங்கள், பயிற்சி, பதவி உயர்வு, போன்ற சந்தர்ப்பங்களில் சம சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

## அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளுதல்

**அது சம்பந்தமான குறிக்கோள்களும் கொள்கைகளும்**

அ. அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது ஜனநாயகப் பண்புகளையும், வகைப்பொறுப்பையும் மேம்படுத்தல்.

ஆ. பன்மைத்துவத்தை அங்கீகரித்து தேசிய ஐக்கியத்தைப் போஷித்தல்.

இ. ஒருசில சுயாட்சி அதிகாரங்களைப் பொதுமக்களுக்கு வழங்குவதன்மூலம் அவர்களைப் பாதிக்கும் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அரச அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு பங்களிப்பதை மேம்படுத்தல்.

ஈ. மக்களின் நடவடிக்கைகளை அவர்கள் தாமாகவே செய்யக்கூடிய வகையில் அவர்களின் உரிமைகளை ஏற்று அவர்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

உ. சிறுபான்மை மக்களினதும், ஓரங்கட்டப்பட்ட மக்களினதும் உரிமைகளைப் பேணிப்பாதுகாத்து மேம்படுத்துதல்.

ஊ. சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல், நாடு பூராவும் இலகுவாகப் பெறக்கூடிய சேவைகள் இருத்தல் வேண்டும்.

எ. தேசிய மற்றும் பிரதேச வளங்களை நியாயமான முறையில் பகிர்வதை உறுதிசெய்தல்.

ஏ. அரச நிறுவனங்களின் சேவைகளை பன்முகப்படுத்துதல்.

ஐ. அதிகார வேறாக்கல், சரிபார்த்தல் மற்றும் சமநிலைப் படுத்தலை (Checks and balances) மேம்படுத்துதல்.

ஒ. இந்த அரச கொள்கைகளையும், குறிக்கோள்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

ஓ. தேசிய மத கலாசார சமத்துவத்தை உருவாக்குவதற்கு அரச கொள்கைகளுக்கு மாகாண அரசாங்கங்களின் ஒத்திசைவைப் பெறவேண்டும்.

ஔ. இனவாத இம்சைகளைப் புரியும் சட்டதிட்டங்களுடனான நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டின் அனைத்:து மக்களுக்குமுள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மாகாண அரசாங்கங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## இயற்கை வளங்களும் அபிவிருத்தியும்

அபிவிருத்தி என்ற எண்ணக் கருவின்கீழ் அமைச்சரவை, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அவர்களுடைய மனதில் ஏற்படும் “அபிவிருத்தியை” சட்டத்திற்கு அமைவாகத் தீர்மானங்களை மேற்கொள்ளும் ஒரு வடிவமைப்பு உண்டு. இயற்கை வளத்தைக் கண்டமாத்திரத்தில், அதனை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்று, ஒருசிலருக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவது அபிவிருத்தியென அவர்கள் கருதுகிறார்கள்.

இயற்கை வளங்களைப் பாதுகாத்துக்கொண்டு அபிவிருத்தியை ஏற்படுத்தும் திட்டங்கள் இருக்க வேண்டும்.

**இயற்கை வளங்கள் என்றால் யாவை?**

அ. சூரிய ஒளி

ஆ. பூமியின் மேற்பரப்பிலும், பூமிக்கு அடியிலும் உள்ள நீர்.

இ. காடுகள் உயிரியல் பன்மைத்துவம், மரபணு வளங்கள்.

ஈ. மலைகள், கனிமப்பொருட்கள் ,புதைபடிமங்கள், எரிபொருள்கள்

உ. மிருகங்கள், வனசீவராசிகள், பறவைகள், பூச்சி புழுக்கள், மீன்கள்

## ஆணைக்குழுக்கள்

1972இன் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அன்று நடைமுறையில் இருந்த அரச சேவை ஆணைக்குழுவிற்குரிய அதிகாரங்களை அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொண்டது. தற்போது 2015ஆகும் போது ஏற்கனவே இருந்த 7 ஆணைக்குழுக்களுக்கு மேலும் 4 ஆணைக்குழுக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இது வரலாற்று அனுபவங்கள் மூலமே மேற்கொள்ளப்பட்டது. அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அரசியல்வாதிகளிடம் ஒப்படைத்த காரணத்தினால் அரச நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், சேவை நீக்கம் என்பவற்றைப் பொறுப்பேற்று அரசியல்வாதிகள் இவ்விடயங்களை ஊழல் மிகுந்த நிலைக்கு மாற்றியுள்ளனர். இந்த ஊழல்களில் இருந்து இந்த ஆணைக்குழுக்களை சுயாதீன ஆணைக்குழுக்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே அமுலில் இருந்த ஆணைக்குழுக்கள் பின்வருமாறு.

1. தேர்தல் ஆணைக்குழு
2. அரசசேவை ஆணைகுழு
3. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
4. மனித உரிமைகள் ஆணைக்குழு
5. இலஞ்ச ஊழல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு
6. நிதி ஆணைக்குழு
7. எல்லை நிர்ணய ஆணைக்குழு

   அரசியலமைப்பிற்கான 19ஆவது திருத்தத்தின் பின்னர் அதிகரிக்கப்பட்ட 4 ஆணைக்குழுக்கள்.

8. கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு
9. தேசிய பெறுகை ஆணைக்குழு
10. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு
11. அரசகரும மொழிகள் ஆணைக்குழு

## புதிய அரசியலமைப்பு உருவாககப்படும்போது இந்த சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு மேலதிகமாகப் பின்வரும் 2 ஆணைக்குழுக்களை உருவாக்குவது சிறந்தது.

i. கல்வி ஆணைக்குழு
ii. வெகுஜன தொடர்பு சாதன ஆணைக்குழு

எமது நாட்டில் காலத்திற்குக் காலம் கல்விக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுகின்றன. இந் நிலைமையை சுயாதீன ஆணைக்குழுக்களே தீர்மானிக்க வேண்டும். வழங்க வேண்டிய கல்வியின் இயல்பு, ஆசிரியர் வகிபாகத்தின் பண்புரீதியான முன்னேற்றம் என்பன சுயாதீன ஆணைக்குழுக்களினால் தீர்மானிக்கப்படுமாயின் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும்.

தற்போதைய அரச அல்லது தனியார் ஊடகங்கள்மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்களின் உள்ளடக்கம் நாட்டிற்குத் தகுதியான, அரச கொள்கைகளுக்கு ஏற்றவையாக அமைதல் வேண்டும். அதேசமயம் ஊடகங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களைப் பற்றி சுயாதீனமான ஆணைக்குழுக்களே தீர்மானிக்க வேண்டும்.

## இலங்கையின் அரச நிருவாகம் மாற்றியமைக்கப்பட வேண்டும்

**மேலே குறிப்பிட்டவாறு 1972இன் குடியரசு அரசியலமைப்பின் மூலம் அரச சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொண்டது. அன்றுமுதல் அந்த அதிகாரத்தை பாராளுமன்ற உறுப்பினர்களும் பயன்படுத்தினர். எனவே அரச துறையின் ஒரு நியமனத்தை, இடமாற்றத்தை, பதவி உயர்வைப் பெறுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் பின்னால் திரியவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. அதற்கு மேலதிகமாக ஓர் அரச உத்தியோகத்தரிடம் பழிவாங்குவதாயின் பாராளுமன்ற உறுப்பினரின் ஊடாக இடமாற்றங்கள் செய்யப்பட்டன. தேர்தலின் பின்னர் எதிர்க்கட்சி அரசியலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்டோர் வகைதொகையின்றி இடமாற்றம் செய்வதற்காகப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. 1972க்கு முன்னர் அவ்வாறு ஏற்படுவதாயின் அமைச்சரின் ஊடாகவே அது இடம்பெற்றது. 1972இன் பின்னர் இது பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.**

இவ்வாறு நியாயமற்ற நியமனங்கள், இடமாற்றங்கள் என்பவற்றைச் செய்வதற்கு அரசியலமைப்பின்மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் கிடைத்தது. அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள்

அரசியல்வாதிகளிடம் இவ்வாறாகவே ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அதற்கு நியாயமான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை.

அதாவது அரசசேவை, அரச உத்தியோகத்தர்களின் கட்டுப்பாட்டில் இருந்தமையே காரணமாகக் கூறப்பட்டது. அக் காலகட்டத்தில் தமது சம்பள ஏற்றத்தை, சம்பளச் சீராக்கத்தை, நியாயமான இடமாற்றத்தைப் பெறுவதற்கு பல அரச அலுவலகங்களுக்கு ஏறி இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்டது. நியாயத்தைப் பெறுவதற்கு நீண்டகாலம் செலவிட நேர்ந்தது. அனைத்து நடவடிக்கைகளும் (Red Tape) சிவப்பு நாடாவுக்கு கட்டுப்பட்டதாகவே அமைந்தது என்று பிரபலமாகக் கூறப்பட்டது. குறித்துரைக்கப்பட்ட ஒரு கடிதம் கடிதக்கோப்பில் இட்டு சிவப்பு நாடாவால் கட்டி ஒரு பக்கத்தில் போடுவதே அதன் பொருளாகும். இந்த சிவப்பு நாடா முறைமை பொதுமக்களுக்கு பாரிய இடையூறுகளை விளைவித்தது. எனவே, துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இவ் விடயங்கள் அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களும், அவர்களின் அடிவருடிகளும் அரசசேவையை முழுமையாகச் சீரழித்தனர். கடந்த அரசாங்க காலத்தில் அரசசேவையின் நியமனங்கள் பலவாய்ந்த அரசியல்வாதிகளின் பிள்ளைகளிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு கடமையாக மாறியது.

**எனவே இந்நடவடிக்கை சுயாதீன ஆணைக்குழுவிற்கு ஒப்படைத்தல் பாராட்டுக்குரியது. ஆனால் அதன்மூலம் மாத்திரம் துரிதமான வினைத்திறன்கொண்ட சேவை நிறைவேறுமா? அவ்வாறு நிறைவேறாத காரணத்தினால் இந்த அதிகாரங்கள் அரசியல்வாதிகளிடமே ஒப்படைக்கப்பட்டன. அரச ஊழியர்களின் வினைத்திறனே தேவைப்படுகிறது. இந்நிலைமையை உருவாக்குவதற்கு அரசியலமைப்பு மூலம் ஒருசில பரிகாரங்கள் தேவைப்படுகின்றன.**

# அரச நிருவாகம்

தற்போது நிலவும் பாரிய எண்ணிக்கை நிறுவனங்களின் வினைத்திறன்கொண்ட சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு அரச நிருவாகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்குப் புதிய சட்டங்கள் அவசியமில்லை. அதற்கான அர்ப்பணிப்பே அவசியமாகிறது.

தற்போது நிலவும் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவை பின்வருமாறு (தற்போது இந்த எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படலாம்)

| | |
|---|---|
| மாகாணசபைகளின் எண்ணிக்கை | 09 |
| அரசாங்க அதிபர்கள் | 25 |
| பிரதேசச் செயலாளர்கள் | 325 |
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | 336 |
| அதிகார சபைகள் (Authorities) | 33 |
| சபைகள் (Boards) | 36 |
| கூட்டுத்தாபனங்கள் (Corporations) | 25 |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் | 29 |
| அரச கம்பனிகள் | 130 |
| திணைக்களங்கள் | 89 |

மேற்குறிப்பிட்ட அனைத்து நிறுவனங்களினதும் அன்றாட நடவடிக்கைகளைத், துரிதமாகவும் வினைத்திறனுடனும் நேர்மையாகவும் மேற்கொள்ளப்பட்டால் மக்களுடைய வாழ்க்கை எவ்வளவு சிறப்பாக அமையும்? அதேசமயம் புதிய ஆணைக்குழுக்களினால் மேற்படி நிறுவனங்களின் எண்ணிக்கை சந்தேகத்திற்கு இடமின்றி அதிகரிக்கப்படும். இந்த அனைத்து நிறுவனங்களையும் மறுசீரமைப்பதற்கும் சேவைகளை சான்றுப்படுத்துவதற்கும் புதிய அரசியலமைப்பின் ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.

## நிதி நிர்வாகம்

சகல நிறுவனங்களினதும் அனைத்து நடவடிக்கைகளும் மிக வினைத்திறனுடன் செயற்படுத்தப்படாவிடின் அதற்கான காரணம் நிர்வாக பலவீனங்கள் மாத்திரமல்ல. சிலவேளை, அரசு மேற்படி நிறுவனங்களைப் பராமரிப்பதற்கு அவசியமான வளங்கள் வழங்கப்படுவதில்லை. உதாரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களை எடுப்போம். மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதி உரிய முறையில் கிடைக்காவிட்டால் அதன் விளைவுகள் எப்படி இருக்கும்? குண்டும் குழியும் கொண்ட உடைந்த வீதிகளில் பயணிக்க நேரிடும். அல்லது வீதியில் வெளிச்சமின்றி இரவில் இருட்டில் பயணிக்க நேரிடும். பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைவாகக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் சாதாரண மக்களே கஷ்டப்படுவர். சில திணைக்களங்களில் எதுவிதமான செயற்பணியும் இடம்பெறாமல் வெறுமனே சம்பளம் வழங்கும் நிலைமை இல்லையா? அவ்வாறு வீண்விரயமாக்கப்படும் பணம் எவ்வளவு?

**எனவே, நிதிநிர்வாகம் உரிய முறையில், சுயாதீன ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். அனேகமாக அனாவசியமான விடயங்களுக்கு செலவுசெய்து அவசியமான விடயங்களுக்கு செலவு செய்யாத சந்தர்ப்பங்கள் இல்லையா? அதனை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன்மூலம் வீண்விரயத்தையும், ஊழல்களையும் தடுக்க முடியும். மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கு ஏற்ப ஒருசேவை இடம்பெறுகிறதா என்பதை மதிப்பாய்வு செய்யும் ஒருவழிமுறை சகல நிறுவனங்களுக்கும் இருக்க வேண்டியதன் அவசியம் தொடர்பான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். அதிக வேலையின்றி அமுலில் உள்ள நிறுவனங்கள் எத்தனை உண்டு என ஒரு கணக்காய்வு செய்யப்பட்டு உரிய பரிகாரங்களை மேற்கொள்வது புதிய அரச நிர்வாகத்திற்கு கட்டாயமாகத் தேவைப்படுகிறது.**

## பொதுமக்களின் நிதி

**பொதுமக்களின் நிதி தொடர்பான கொள்கைகள் திட்டங்கள்மீது பின்வரும் கோட்பாடுகள் அமுலாக்கப்பட வேண்டும்.**

அ. நிதி நடவடிக்கைகள் தொடர்பான வெளிப்படைத் தன்மையும் வகைப்பொறுப்பும் நிலவவேண்டும். அதேசமயம் அவசியமான சகல சந்தர்ப்பங்களிலும் பொதுமக்களின் பங்களிப்பு இருத்தல் வேண்டும்.

ஆ. பொதுமக்களின் நிதி தொடர்பான வழிமுறை நியாயமாகவும், சமூக அபிவிருத்திக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். அதாவது

- வரிச்சுமை, நியாயமான முறையில் பகிரப்பட வேண்டும்.
- தேசிய மட்டத்தில் பெறப்படும் வருமானம் தேசிய மற்றும் பிரதேச ரீதியாக சமமாகப் பகிரப்பட வேண்டும்.
- செலவு செய்யப்படும்போதும் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் சமமான அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், ஓரங்கட்டப்பட்ட பிரதேசங்கள் மற்றும் பொதுமக்களுக்கான விசேட ஏற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும்.

இ. வளங்களைப் பயன்படுத்தும்போதும், மக்களின் நிதியை கடனாகப் பெறும்போதும் அதன் சாதகமான பாதகமான அம்சங்கள் தற்போதைய பரம்பரையினருக்கும், எதிர்காலப் பரம்பரையினருக்கும் நியாயமாகப் பகிரப்பட வேண்டும்.

ஈ. பொதுமக்களின் நிதி புத்திசாலித்தனமாகவும் வகைப்பொறுப்புடனும் பயன்படுத்தப்பட வேண்டும்.

உ. நிதிமுகாமைத்துவம் வகைப்பொறுப்புடன் நிகழவேண்டும். அதேசமயம் அதுசம்பந்தமான அறிக்கையிடல் தெளிவாக அமைதல் வேண்டும்.

## வேண்டுமென்றே நாட்டை அடிமைப்படுத்தும் சட்டங்கள்

அரசியலமைப்பின் 157ஆவது உறுப்புரை

**இந்த உறுப்புரை 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் மிக இரகசியமாகன முறையிலேயே சேர்க்கப்பட்டுள்ளதென கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா காரசாரமாகக் கண்டித்து விமர்சனம் செய்தார். அதன் தொனிப்பொருளே எம்மை வழிதவறி அழைத்துச் செல்கிறது. அதாவது சர்வதேச "சமவாயங்களும், உடன்படிக்கைகளும்" என்றே உறுப்புரையின் தொனிப்பொருள் குறிப்பிடுகின்றது. இதனை மேலோட்டமாக நோக்கினால் ஐ.நா.சபையுடன் ஏற்படுத்தும் சமவாயங்களையும், உடன்படிக்கைகளையுமே எமக்கு உணர்த்துகின்றன. ஆனால், அதனை சற்றுக் கவனமாக வாசிக்கும்போது "இலங்கைக்குள் முதலீட்டை மேம்படுத்துவதையும், பாதுகாப்பதையும்" இது குறிப்பிடுகிறது. வெளிநாட்டு அரசொனறின் கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள் என்பவற்றுடன் ஏற்படுத்தும் உடன்படிக்கையாகவே இது அமைந்துள்ளது.**

**இந்த உடன்படிக்கை 2/3 பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நாட்டின் சட்டமாகிவிடும் என அதே உறுப்புரையில் குறித்துரைக்கப்படுகிறது. அதேசமயம், இந்த உடன்படிக்கைக்கு எதிராக எந்தவொரு சட்டத்தையும் இயற்ற முடியாது. இந்த உடன்படிக்கையை மீறும் வகையில் எந்தவொரு நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்படக் கூடாது. அந்த உறுப்புரை பின்வருமாறு,**

"157. பாராளுமன்றமானது, அதன் முழு எண்ணிக்கையினரில் (சமூகமளிக்காதோர் உட்பட) 2/3 க்கு குறையாதோர் சாதகமாக

வாக்களிப்பதன் மூலம் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தினால், இலங்கை அரசாங்கத்துக்கும் ஏதேனும் வெளிநாட்டு அரசுக்கும் இடையிலானதும், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும், காப்பதற்குமான ஏதேனும் சமவாயத்தை அல்லது உடன்படிக்கையை அது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமாக உள்ளதென அங்கீகரிக்கின்றவிடத்து, அத்தகைய சமவாயம் அல்லது உடன்படிக்கை இலங்கையில் சட்டவலுக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய சமவாயத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக எழுத்திலான சட்டம் எதுவும் தேசிய பாதுகாப்பு நலன்களுக்காகவன்றி வேறுவிதத்தில் இயற்றப்படுதலோ ஆக்கப்படுதலோ ஆகாது என்பதுடன், ஆட்சிதுறை நடவடிக்கையோ நிர்வாக நடவடிக்கையோ எடுக்கப்படுதலும் ஆகாது.”

இத்தகைய உடன்படிக்கைகளை எதற்கு ஏற்படுத்தப்பட வேண்டும்? இலங்கைக்குள் வெளிநாட்டு முதலீடுகள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கே ஈடுபடுத்தப்படுகின்றன என அரசாங்கம் எமக்குக் கூறுகிறது. ஆனால். இவ்வாறு முதலீடு செய்து 20 அல்லது 30 ஆண்டுகளின் பின்னர் அவ்வாறு புதிதாக ஏற்பட்ட அபிவிருத்தி என்னவென்று தெளிவுபடுத்தப்படவில்லை. எனினும் ஒரு சிலருக்கு “தொழில் வாய்ப்பு” கிடைத்துள்ளதெனக் கூறலாம். இந்த அபிவிருத்திக்காக எமது நாட்டில் இலாபகரமான உழைப்பு வாங்கப்படுகிறது. எமது உழைப்பு குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. இதற்கு அபிவிருத்தி என்று அர்த்தம் கற்பிக்கப்படுகிறது. இவ்வாறாக உழைப்பு சுரண்டப்படுவது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. அதன்போது சுரண்டலைப் பேணிப்பாதுகாப்பதற்கு சட்டத்தால் கடப்பாடு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களில் தொழிற்சங்கங்களை

அமைப்பதற்கு எமது நாட்டில் நிலவும் சட்டங்களைப் பயன்படுத்த முடியாது. காரணம் அதை மீறி அரசியலமைப்பு செயற்படுவதாகும். இந்தப் பொருளாதார அபிவிருத்தி அல்லது விசேட சுரண்டலை வசதி செய்வதற்கு இந்த அரசியலமைப்பை செயற்படுத்துவதற்கு அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும் பயன்படுத்தப்பட்டன. எனவே, தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அவை அரசியலமைப்பிற்கும், ஒடுக்குமுறைச் சட்டங்களுக்கும் எதிராக அமையும். அதன்போது ஒப்பந்தத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றுத் தீர்மானங்களையோ அல்லது நிர்வாக நடவடிக்கைகளையோ மேற்கொள்ள முடியும். ஆனால், அதற்கு முரணான தீர்மானங்களையோ நடவடிக்கைகளையோ மேற்கொள்ள முடியாது.

எமது நாட்டு உழைப்பாளிகளின் சுதந்திரம் இதன்மூலம் பாதுகாக்கப்படுகிறதா? அல்லது வெளிநாட்டவர்களின் சுரண்டலுக்கான சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறதா? 1978 முதல் ஏற்படுத்தப்பட்ட மேற்படி அபிவிருத்தியின்மூலம் எமது நாட்டின் வறுமை நீக்கப்பட்டு விட்டதா? தொழிலாளர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா? விவசாய நிலங்களை கொங்கிரீட் வனாந்தரங்களாக மாற்றியமைப்பதன்மூலம் விவசாயியின் வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

சீனா, இந்தியா போன்ற நாடுகளும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு வாய்ப்பளித்துள்ளன. ஆனால், முழுமையாக உழைப்பைச் சுரண்டுவதற்கும், நாட்டின் தொழிற்சட்டங்களை மீறுவதற்கும் வெளிநாட்டவர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதா? எமது நாட்டில் வெளிநாட்டவர்களைப் பாதுகாப்பதற்கான உடன்படிக்கைகளே உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கு சுதேசிகள் – தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் துப்பாக்கிச் சூடே வழங்கப்படும். இது தேசிய அபிவிருத்தியென அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியாக ஆட்சிசெய்த போது இந்த சட்டங்களே அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னர், ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள்

அச் சட்டங்களை அதிக அளவில் பயன்படுத்தாவிட்டாலும், அவற்றைப் பயன்படுத்த முடியும் என்ற அச்சம் ஏற்படுத்தப்பட்டு இருந்தது. தற்போதைய நிலைமையும் அதுவே.

**ஆனால் இத்தகைய வெளிநாட்டு அடிமைத்தனத்தை சட்டமாக்கும் முயற்சிகளில் இருந்து விடுபட வேண்டும். எனவே, புதிய அரசியலமைப்பின் மூலம் எமதுநாட்டு மக்களை அடிமைப்படுத்தும் நிபந்தனைகளுக்குப் பதிலாக நியாயமான முறையில் இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.**

**எனவே, எமது அரசியலமைப்பில் 157 வது உறுப்புரையை மீண்டும் இயற்றுவதற்கு எமது மக்கள் எதிர்பார்க்கவில்லை.**

## பொதுமக்களின் மனுக்கள்

தற்போது தனிப்பட்ட பிரச்சினைகளைப்பற்றி பொதுமக்கள் மனுக் குழுவிற்கு ஒரு மனுவை அனுப்பி வைக்கும் வாய்ப்புக்களை மேலும் விரிவுபடுத்தி வினைத்திறன்கொண்ட ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டும்.

அதேசமயம், தேசிய இனப்பிரச்சினை, பொது நன்மைக்கான பிரேரணைகள் என்பவற்றை ஆராய்வதற்கு புதிய மனுக்குழுச் சபையை உருவாக்க் வேண்டும். பொதுமக்கள் தமது கருத்துக்களை அறிவிப்பதற்கும், அங்கீகரிப்பதற்கும் வெளிப்படையான சந்தர்ப்பத்தை வழங்கப்படுமேயாயின் அனேகமான ஆர்ப்பாட்டங்களும், பிணக்குகளும் குறையும். இதற்கான பரிகாரங்களில் ஈடுபடுவதற்கும் மேற்படி குழுவிற்கு அல்லது அதற்கென நியமிக்கப்படும் குறைகேள் அதிகாரிக்கு (ஒம்புட்ஸ்மன்) ஆற்றல் இருக்க வேண்டும்.

## சட்டமும் மொழியும்

தற்போதைய அரசியலமைப்பின் 23ஆவது உறுப்புரை பின்வருமாறு கூறுகிறது.

> "23. எல்லாச் சட்டங்களும் துணைநிலை சட்டவாக்கங்களும் சிங்களத்திலும், தமிழிலும் சட்டமாக்கப்படுதலும் அல்லது இயற்றப்படுதலும், வெளியிடப்படுதலும் வேண்டும். அவை ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்."

சட்டத்தை இயற்றும் மொழியாக அரசிலமைப்புச் சட்டத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது. ஆனால், என்ன நடந்துள்ளது? ஆங்கிலத்தில் சட்டங்கள் இயற்றப்பட்டு அவை சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்க்கப்படுகின்றன. அனேகமான சந்தர்ப்ப ங்களில் சிங்களத்திலும், தமிழிலும் சட்டங்களின் பிரதிகளைத் தேடிக்கொள்வது மிகக் கஷ்டமான ஒரு காரியமாகும்.

**புதிதாக உருவாக்கப்பட உள்ள அரசியலமைப்பை உருவாக்குவோர் எவ்வாறு செயற்படப் போகின்றனர்? ஆங்கிலத்தில் மூலப்பிரதியை எழுதி சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்க்கப் போகின்றனரா? இந்த ஏமாற்று வித்தை தொடர்ந்தும் செயற்படக் கூடாது. அரசியலமைப்பு யாருக்காக? சிங்களம் அல்லது தமிழ்மொழி பேசும் பெரும்பான்மையினருக்காயின் அவர்களின் மொழியில் அது தயாரிக்கப்பட வேண்டும். ஆங்கிலத்தில் எழுதுவதன் மூலம் மாற்றம் ஏற்பட மாட்டாதென தர்க்கம் புரிந்தாலும் பெரும்பான்மையினரின் மொழிகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் அவ்வாறு செய்யக்கூடாதா?**

**மும்மொழிகளில் ஒரேநேரத்தில் எழுதி ஓர் அரசியல மைப்பைத் தயாரிப்பது புதுமையான ஓர் விடயம் அல்ல.**

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**
6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011 2370803 / 4
ஃபக்ஸ் : 011 2370801 / 2
இணையதளம் : www.cpalanka.org
மின்னஞ்சல் : info@cpalanka.org

ISBN : 978-955-4746-40-4